தினமணி

## உளுந்துப் பயிருக்கு வீராணம் நீர் திறப்பு

First Published : 08 Mar 2010 12:33:32 AM IST

கடலூர், மார்ச் 7: கடலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பகுதிகளில் உளுந்துப் பயிருக்கு வீராணம் ஏரியில் இருந்து வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடப்படப்பட இருக்கிறது.

÷கடலூர் மாவட்டத்தில் காவிரி டெல்டா பாசனப் பகுதிகள் 1.5 லட்சம் ஏக்கரில் சம்பா சாகுபடி செய்யப்படுகிறது. சம்பா நெல் அறுவடைக்கு 10 தினங்களுக்கு முன், வயல்களில் ஊடுபயிராக உளுந்து விதைத்து விடுவார்கள்.

÷வயலில் உள்ள ஈரப்பதத்திலும், பனியிலும் 90 நாள்களில் விளைந்து அறுவடைக்குத் தயாராகி விடும் உளுந்து. இந்த ஆண்டு சம்பா பயிருக்கு காவிரி நீர் தாமதமாகக் கிடைத்ததாலும், உளுந்து விதை, தேவையான அளவுக்கு கிடைக்காததாலும், 70 ஆயிரம் ஏக்கரில் மட்டுமே உளுந்து விதைக்கப்பட்டு உள்ளது. அண்மையில்தான் டி-9 உளுந்து விதையை, வேளாண் துறை தருவித்து வேளாண் விரிவாக்க மையங்களில் விற்பனைக்கு வைத்து உள்ளது. வழக்கம்போல் மேட்டூர் அணை ஜனவரி 28-ம் தேதியுடன் பாசனத்துக்கு மூடப்பட்டு விட்டது. வீராணம் ஏரியின் அனைத்து பாசன வாய்க்கால்களும் மூடப்பட்டு விட்டன.

÷எனவே தற்போது பயிரிடப்பட்டு 30 முதல் 40  நாள்கள் ஆகி இருக்கும் உளுந்து பயிருக்கும், புதிதாக உளுந்து விதைக்க விரும்பும் விவசாயிகளுக்கும், வீராணம் ஏரி நீர் விட்டு விட்டு 3 நாள்கள்கள் வழங்கினால், உளுந்து உற்பத்தியை பெருக்க முடியும் என்று விவசாயிகள் அரசுக்குத் தெரிவித்து இருந்தனர்.

÷விவசாயிகளின் கோரிக்கையை தமிழக அரசு ஏற்றுக் கொண்டு இருப்பதாக விவசாய சங்கங்களின் கூட்டமைப்பின் கடலூர் மாவட்ட அமைப்புச் செயலாளர் பி.ரவீந்திரன் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். அவர் மேலும் கூறியது:

÷உளுந்துப் பயிருக்கு  வீராணம் ஏரி நீர் வழங்குவது குறித்து, பொதுப் பணித்துறை அதிகாரிகள் விவாதித்தனர். அந்தந்த பகுதி விவசாயிகளின் கோரிக்கைக்கு இணங்க, வாய்க்கால்களில் 20 கன அடி நீர் திறக்க சம்மதித்து இருக்கிறார்கள். இதன் மூலம் முக்கிய வாய்க்கால்களில் தண்ணிரைத் தேக்கி வைத்து, அதில் இருந்து தேவைப்படும் நீரை விவசாயிகள் எடுத்து, டி.ஏ.பி. நுண்ணூட்டச் சத்துக் கரைசலை, கைத் தெளிப்பான்கள் மூலம் தெளிக்க வசதியாக இருக்கும்.

÷இதனால் உளுந்து மகசூல் அதிகரிக்க வாய்ப்பு ஏறப்பட்டு உள்ளது. டி.ஏ.பி. உரம் 50 சதவீதம் மானிய விலையில் மத்திய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தில் வழங்கப்படுகிறது. புதிதாக உளுந்து பயிரிடுவோரும், இந்த நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்தினால் 40 ஆயிரம் ஏக்கரில் உளுந்து பயிரிட்டு, நல்ல மகசூலைப் பெறமுடியும். விவசாயிகள் தங்கள் பகுதி பொதுப் பணித் துறை அலுவலர்களை அணுகி தண்ணீரைக் கேட்டுப் பெற்று, இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார் ரவீந்திரன்.

## வேளாண் பல்கலை. விஞ்ஞானிக்கு தேசிய விருது

கோவை, மார்ச் 6: புதுதில்லியில் உள்ள இந்திய நூற்புழுவியல் கழகம் வழங்கும் பேராசிரியர் எச்.எம்.ஷா நினைவு விருது, கோவை வேளாண் பல்கலைக்கழக பேராசிரியர் ஏ.ஐ.ஜோனத்தனுக்கு (படம்) வழங்கப்பட்டுள்ளது.

÷அவர் பல்கலையின் பயிர் பாதுகாப்பு மைய இயக்குநராக உள்ளார். நூற்புழுவியல் துறையில் மேற்கொண்ட பல்வேறு ஆராய்ச்சிகளுக்காக இவ்விருது வழங்கப்பட்டுள்ளது. இவர் இதுவரை ரூ.1 கோடி மதிப்பிலான 5 ஆராய்ச்சித் திட்டங்க ளுக்கு முதன்மை ஆய்வாளராக செயலாற்றியுள்ளார்.

÷வாழை, தக்காளி, கருமிளகு, வெற்றிலை போன்ற பயிர்களில் நூற்புழு மேலாண்மைக்கு பேசில்லஸ் சப்டிலிஸ், சூடோ மோனாஸ் புளூரசன்ஸ் போன்ற நன்மை செய்யும் பாக்டீரியாக்களை பயன்படுத்துவது குறித்து இவர் ஆராய்ச்சி செய் துள்ளார்;

இதுவரை நான்கு புத்தகங்கள், 75 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டுள்ளார்.

## துல்லியப் பண்ணையத்தில் காய்கறி சாகுபடி குறித்த பயிற்சி

நீடாமங்கலம், மார்ச் 6: நீடாமங்கலம் வேளாண் அறிவியல் நிலையத்தில் துல்லிய பண்ணையத்தில் காய்கறி சாகுபடி குறித்த விவசாயிகளுக்கான 4 நாள் பயிற்சி அண்மையில் நடைபெற்றது.

பயிற்சியைத் தொடக்கிவைத்து நபார்டு வங்கியின் மாவட்ட வளர்ச்சி அதிகாரி வி.ஏ. ராகவன் பேசியது:

துல்லியப் பண்ணையம் மூலம் காய்கறி சாகுபடி செய்வதால் பல மடங்கு வருவாய் பெற முடியும். ஏக்கருக்கு நிகர லாபமாக ரூ. 4 லட்சம் வரையில் வருவாய் தரக் கூடிய துல்லிய பண்ணையத் திட்டத்தில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர் என்றார்.

துல்லியப் பண்ணைய திட்டத்தின் நோக்கம், செயல்படுத்தும் விதம், காய்கறி சாகுபடி தொழில்நுட்பம், சொட்டுநீர்ப் பாசனம், உரநீர்ப் பாசனம், குழித்தட்டு நாற்றங்கால் தயாரிப்பு, காய்கறிகளில் பூச்சி நிர்வாகம், சந்தைப்படுத்துதல் ஆகியன குறித்து தி. சகுந்தலா செயல் விளக்கம் அளித்தார்.

பயிற்சியின் நிறைவு நாளில் துல்லியப்பண்ணையத்தில் காய்கறி சாகுபடி என்ற தலைப்பிலான புத்தகத்தை வெளியிட்டு, விவசாயிகளுக்கு சான்றிதழ்களை வழங்கி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் சோம. நடேசமணி, நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் தி. செங்குட்டுவன் ஆகியோர் பேசினர். பயிற்சியில், 12 மாவட்டங்களைச் சேர்ந்த 80 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இணைப் பேராசிரியர் அ. பவுன்ராஜ் வரவேற்றார். பயிற்சி ஒருங்கிணைப்பாளர் கை. குமணன் நன்றி கூறினார்.

## இயற்கை வளம் பேணும் வேளாண் தொழில்நுட்பங்கள் அவசியம்

First Published : 08 Mar 2010 05:21:33 AM IST

கோவை, மார்ச் 7: இயற்கை வளம் பேணும் வேளாண் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவது அவசியம் என வேளாண் பல்கலை. பதிவாளர் ப.சுப்பையன் வலியுறுத்தினார்.

கோவை வேளாண் பல்கலை.யில் சனிக்கிழமை நடந்த இயற்கை வள ஆதாரம் காக்கும் வேளாண்மை பயிற்சி துவக்க விழாவில் அவர் பேசியது:

இனி வரும் காலங்களில் சுமார் 320 மில்லியன் டன் அளவுக்கு உணவு தானிய உற்பத்தி செய்ய வேண்டி உள்ளது. தற்போது, வேளாண்மைக்காக பயன்படுத்தப்படும் நிலம், நீர் போன்ற இயற்கை ஆதாரங்கள் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

சர்வதேச உணவு மற்றும் வேளாண்மை நிறுவனத்தின் புள்ளி விவரப்படி நிலத்தடி நீர் வேளாண்மைக்கு அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. உலகளவில் ஒவ்வொர் ஆண்டும் 3.8 பில்லியன் டன் நீர் உபயோகப்படுத்தப்படுகிறது. அதில், சுமார் 70 விழுக்காடு வேளாண்மைக்கு பயன்படுகிறது.

2025}ல் இந்த நீர் தேவை இன்னும் 15 விழுக்காடு கூடுதலாக வாய்ப்பு உள்ளது. மேலும், தீவிர வேளாண்மையால் வேளாண் நிலங்களின் கரிம அளவு குறைந்து வருகிறது. மண் வளம் பாதிப்பு, புவி வெப்பமயமாதல் போன்ற நிகழ்வுகளால் 30 முதல் 50 விழுக்காடு வரை மண்ணில் கரிம இழப்பு கடந்த நூற்றாண்டில் ஏற்பட்டது. இதுபோன்ற

குறைபாடுகளைத் தவிர்த்து எதிர்கால வேளாண்மையை வளமாக்க இயற்கை வளங்களை பேணுகின்ற வேளாண்மையில் ஈடுபட வேண்டும். அதற்கேற்ப தொழில்நுட்பங்களையும் கண்டறிந்து செயலாக்க வேண்டும்.
இதுபோன்ற இயற்கை வளம் பேணும் வேளாண் தொழில்நுட்பங்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு முன்பே கண்டறியப்பட்டிருந்தும் கடந்த 10 ஆண்டுகளில்தான் அவற்றின் முக்கியத்துவம் அதிகமாக உணரப்பட்டுள்ளது.

இதுபோன்ற வேளாண்மை உலகளவில் சுமார் 80 நாடுகளில் 80 மில்லியன் எக்டருக்கும் மேலான நிலப்பரப்பில் கடைப்பிடிக்கப்படுகிறது. மேலும், நிலத்தை தேவையற்ற முறையில் உழவு செய்யாமல் இருத்தல், வேளாண்மையில் கிடைக்கக் கூடிய உபபொருள்களை சரிவர பயன்படுத்துதல், மண்ணின் வளம் காக்கக்கூடிய பயிர்கள், பயிர்த் திட்டங்கள், மாற்றுப் பயிர்கள் போன்ற சுற்றுப்புறச்சூழலுக்கு பாதிப்பு ஏற்படுத்தாத தொழில்நுட்பங்களை பின்பற்றுதல் போன்ற மாற்று முறைகள் இப் புதிய வேளாண் அணுகுமுறையில் உள்ளடங்கும்.
இயற்கை வள ஆதாரங்களைப் பாதுகாத்து மனித குலத்துக்கு உணவு அளிக்கக் கூடிய அளவுக்கு இப் புதிய வேளாண் அணுகுமுறை சிறந்ததாகும்.

இதன்மூலம், குறைந்த உற்பத்திச் செலவு, குறைவான களைகள், நீர் மற்றும் சத்துக்களைப் பாதுகாத்தல் பயிரில் இருந்து கிடைக்கும் உபரிப் பொருள்களை சிறந்த முறையில் பயன்படுத்துதல், மண்ணின் உயிர் வளம் காத்தல் போன்ற நன்மைகள் கிடைக்கும் என்றார் அவர்.
மண் மற்றும் பயிர் மேலாண்மை மைய இயக்குநர் சி.ஜெயராமன், உழவியல் துறைத் தலைவர் பு.முத்துக்கிருஷ்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### 10 லட்சம் மரக்கன்றுகள் நடும் திட்டம்: ஆலோசனைக் கூட்டம்

First Published : 07 Mar 2010 01:28:12 PM IST

விருதுநகர், பிப். 17: விருதுநகர் மாவட்டத்தை பசுமையுடன் கூடிய மாவட்டமாக மாற்றும் விதத்தில், ஜூன் 5-ம் தேதி 10 லட்சம் மரக்கன்றுகள் நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று ஆட்சியர் சிஜி தாமஸ் வைத்யன் தெரிவித்தார்.
உலக சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு, வறட்சி மிகுந்த விருதுநகர் மாவட்டத்தை இயற்கை வளம் கொண்ட மாவட்டமாக மாற்றக் கூடிய திட்டத்தை அமல்படுத்த மாவட்ட நிர்வாகம் அக்கறை காட்டி வருகிறது.
இதுகுறித்து விருதுநகரில் முன்னோடி ஆலோசனைக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இதில் மாவட்ட ஆட்சியர் சிஜி தாமஸ் வைத்யன் பேசியது:
விருதுநகர் மாவட்ட நிலையில், ஜூன் 5-ம் தேதி மட்டும் 10 லட்சம் மரக்கன்றுகள், இம் மாவட்ட மக்கள் மூலமாக நடுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக மரக்கன்றுகள் தயாராகி வருகின்றன. அனைவரும் ஒருங்கிணைந்து இப் பணியை மேற்கொள்ள வேண்டும்.
இதை நன்கு நிறைவேற்றும் விதத்தில் கிராம நிர்வாக அலுவலர்கள், நகராட்சி, பேரூராட்சி பணியாளர்கள் வீடு வீடாகச் சென்று கணக்கெடுககும் விதத்தில் படிவங்கள் தரப்பட்டுள்ளன. இதில் குறிப்பிடப்படும் முகவரி அடிóப்படையில் தான் வீடுகள்தோறும் மரக்கன்றுகள் வழங்கப்படும்.
குறிப்பாக, வீடுகளில் படிக்கும் குழந்தைகள் குறித்த விவரத்தை அந்தப் படிவத்தில் தவறாமல் எழுத வேண்டும். ஏனென்றால், பள்ளி மாணவ, மாணவியர் மனதில் எந்த விஷயமும் ஆழமாகப் பதிந்து விடும். இப் பணியை அவர்கள் ஆர்வமுடன் செய்யக்கூடும்.
புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி வசிப்போருக்கும் மரக்கன்றுகள் வழங்கலாம். ஆனால், இதை ஆதாரமாகக் கொண்டு, புறம்போக்கு நிலம் அல்லது மரத்துக்கு உரிமை கோரக் கூடாது. ஒவ்வொரு மரக்கன்று வழங்கும்போதும, அவர்களுக்கு சான்றாவணம் தரப்படும.

சொந்த இடத்தில் தேக்கு மரக்கன்றை நட்டு வளர்ப்போர், எதிர்காலத்தில் அதை அகற்றுவதற்கு மேற்குறிப்பிட்ட சான றாவணம் உதவியாக இருக்கும்.

பிரச்னைக்குரிய நிலத்தில் மரக்கன்றுகள் நடுவதற்கு அனுமதி வழ்ங்கக் கூடாது.

இத்திட்டம் மூலம் தென்னை, தேக்கு, சிறுநெல்லி ஆகிய மரக்கன்றுகள் பயனாளிகளுக்குத் தரப்படும. மரக்கன்றுகளுக் காக கணக்கெடுக்கும் பணியை மார்ச் மாதம் 10-ம் தேதிக்குள் நிறைவு செய்ய வேண்டும்.

மிகச் சிறந்த திட்டமாக இத் திட்டம் அமையும் வகையில், அனைவரும் ஈடுபாட்டோடு செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் ஆட்சியர்.

கூட்டத்தில், ஊராட்சி மன்றத் தலைவர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சித் தலைவர்கள், வனத் துறை அலுவ லர்கள், வேளாண் துறை அலுவலர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள், ஊராட்சி எழுத்தர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## மொடச்சூர் சந்தையில் மிளகாய் விலை சரிவு

First Published : 08 Mar 2010 01:55:15 AM IST

கோபி, மார்ச் 7: வரத்து அதிகரிப்பால் கோபி மொடச்சூர் சந்தையில் வரமிளகாய் விலை சரிந்தது.

÷கோபி தாலுகாவில் பாரியூர், பொலவக்காளிபாளையம், ஒத்தக்குதிரை, பா.வெள்ளாளபாளையம், வெள்ளாங்கோயில் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் மஞ்சள் பயிரில் ஊடுபயிராக மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது மிளகாய் அறுவடை தொடங்கி உள்ளது. இங்கு அறுவடை செய்யப்படும் மிளகாய்கள் கோபி மொடச்சூரில் நடைபெறும் வாரச்சந்தைக்கு விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகறது.

÷சனிக்கிழமை நடைபெற்ற மொடச்சூர் வாரச்சந்தையில் வரமிளகாய் வரத்து அதிகமாக இருந்தது. திருப்பூர், மூலனூர், சேலம் மாவட்டம் கொளத்தூர் மட்டுமின்றி ஆந்திரா மாநிலத்தில் இருந்தும் விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் லாரி, வேன், சரக்கு ஆட்டோ போன்ற வாகனங்களில் வரமிளகாயை மூட்டை மூட்டையாக விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர்.

÷குண்டு மிளகாய், நீள மிளகாய், காம்பு மிளகாய், சம்பா மிளகாய் என பல்வேறு ரக வரமிளகாய்கள் விறபனைக்காக கொண்டு வரப்படடு இருந்தது. இதில் சம்பா ரக மிளகாய் கிலோ ஒன்று ரூ.60 முதல் ரூ.70 வரைக்கும், காம்புடன் கூடிய வரமிளகாய் ரூ.75 வரையிலும் விற்பனை செய்யப்பட்டன.÷குண்டு மிளகாய் ரூ.110 முதல் ரூ.120 வரை விற்பனை செய்யப்பட்டது.

கடந்த வாரத்தை விட இந்த வாரம் மொடச்சூர் சந்தைக்கு மிளகாய் வரத்து அதிகமாக இருந்தது. இதனால் கிலோவுக்கு ரூ,5 முதல் ரூ.10 வரை விலை குறைந்தது. விலை குறைவால் வரமிளகாய் கடைகளில் பொதுமக்கள் அதிகமாக வாங்கிச் சென்றனர்.

## மரபணு மாற்றம் குறித்த கருத்தரங்கு

First Published : 08 Mar 2010 12:37:05 AM IST

புதுச்சேரி, மார்ச் 7: புதுச்சேரி பகுத்தறிவாளர் கழகம் சார்பில் சுற்றுச்சூழலில் மரபணு மாற்றம் குறித்த கருத்தரங்கு ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பகுத்தறிவாளர் கழகம் சார்பில் பெரியார் படிப்பகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் முனைவர் நா.இளங்கோவன் சிறப்புரையாற்றினார்.

கழக செயலர் கோ.மு.தமிழ்ச்செல்வன், தலைவர் வீர.இளங்கோவன், இணைச் செயலர் ச.பாலமுருகன், திக தலைவர் வ.சு.சம்பந்தம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தம்மம்பட்டியில் தக்காளி விலை உயர்வு**

First Published : 08 Mar 2010 01:44:53 AM IST

தம்மம்பட்டி, மார்ச் 7: தம்மம்பட்டி தக்காளி மண்டிக்கு தக்காளி வரத்து குறைந்ததால்,விலை இருமடங்காக உயர்ந்துள்ளது.
÷சேலம் மாவட்டம் தம்மம்பட்டியில் உள்ள தக்காளி மண்டிகளுக்கு சுற்று வட்டார ஊர்களான செந்தாரப்பட்டி,நாகியம்பட்டி,கீரிப்பட்டி,ஜங்கமசமுத்திரம்,பனந்தோப்பு,வாழக்கோம்பை, கொண்டயம்பள்ளி,கூடமலை உள்ளிட்ட ஊர்களில் இருந்து கூடைகளில் தக்காளிப் பழங்கள் வருகிறது.
÷வழக்கமாக சுமார் 400க்கும் மேற்பட்ட கூடைகளில் தக்காளி தினந்தோறும் வரும். ஆனால் கடந்த 2 நாட்களாக 80 கூடை மட்டுமே வந்தது. இதனால் 2 நாட்களுக்கு முன்னர் வரை கிலோ 5 ரூபாய்க்கு விற்கப்பட்டு வந்த தக்காளி, தற்போது ரூ.10க்கு விற்கப்படுகிறது.

**கரும்பு சாகுபடி செயல் விளக்க பயிற்சி முகாம்**

First Published : 08 Mar 2010 12:30:05 AM IST

கள்ளக்குறிச்சி, மார்ச் 7: கரும்பு சாகுபடி குறித்த செயல் விளக்க பயிற்சி முகாம் வானியத்தல் கிராமத்தில் அண்மையில் நடைபெற்றது.
இதற்கு ஆலையின் ஆட்சியர் சி.சேகர் தலைமை வகித்தார். ஊராட்சித் தலைவர் ஆறுமுகம் வரவேற்றார். செயல் முறை விளக்கத்தைத் தொடர்ந்து கரும்பு சாகுபடி தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.
கரும்பில் துல்லிய பண்ணையம் மூலம் சொட்டு நீர் பாசனம் அமைப்பது குறித்து கள்ளக்குறிச்சி தோட்டக்கலைத் துறை உதவி அலுவலர் இளங்கோவும், மண்ணின் வளம் காப்பதில் அங்கக உரங்களின் பங்களிப்பு என்ற தலைப்பில் ஆலை அழுக்கை சிறப்பாக பயன்படுத்திக் கொள்ளும் முறைகள் பற்றி கரும்பு பெருக்கு அலுவலர் (பொறுப்பு) சேவியரும் பயிற்சி அளித்தனர்.
கரும்பு அலுவலர் வில்லியம்ஸ் பேசுகையில், கரும்பு விவசாயிகள் அதிகளவில் கரும்பு நடவு செய்து ஆலைக்குப் பதிவு செய்ய வேண்டும் என்றார்.
கரும்பு அலுவலர் பால் சுதாகர், கரும்பு பெருக்கு உதவியாளர் ஆர். ஜெயபாண்டியன் மற்றும் கரும்பு உதவியாளர்கள், விவசாயிகள் திரளாகக் கலந்துகொண்டனர்.கரும்பு உதவியாளர் பாஸ்கரன் நன்றி கூறினார்.

**கால்நடை மருத்துவ முகாம்**

First Published : 08 Mar 2010 12:29:51 AM IST

உளுந்தூர்பேட்டை, மார்ச் 7 : உளுந்தூர்பேட்டை வட்டம், புகைப்பட்டி கிராமத்தில் கால்நடை பராமரிப்புத் துறையும், கீண்டோ தொண்டு நிறுவனமும் இணைந்து இலவச கால்நடை மருத்துவ முகாமை வெள்ளிக்கிழமை நடத்தின.
÷இதையொட்டி, 756 மாடுகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது. 75 கன்று குட்டிகள் மற்றும் 306 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது.
÷25 பசுகளுக்கு மலட்டு நீக்க சிகிச்சையும், 20 பசுகளுக்கு சினை பரிசோதனையும் மேற்கொள்ளப்பட்டது.

÷முகாமுக்கு கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் பி. துரைராஜன் தலைமை வகித்தார். உதவி இயக்குநர் டாக்டர் எஸ். இளங்கோவன், உதவி மருத்துவர் கே. மகேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மருத்துவர் எம். இளவரசு வரவேற்றார்.

÷முகாமை ஊராட்சித் தலைவர் உத்திரகவுண்டர் தொடக்கிவைத்தார். கால்நடை மருத்துவர்கள் நரேந்திரன், எம். பிரேமாலதா, கால்நடை ஆய்வாளர்கள் ஆர். நடராஜன், ஏ. கணேசன் உள்ளிட்ட குழுவினர் சிகிச்சை அளித்தனர்.

÷கீண்டோ தொண்டு நிறுவனர் ஆரோக்கியம்மாள் சண்முகம் நன்றி கூறினார்.

தினமலர்

### மரம் வளர்ப்போர் கருத்தாய்வு கூட்டம்

கோவை : கருத்தாய்வு கூட்டம், வன விரிவாக்க மையம், மாவட்ட மூலிகை மற்றும் மரம் வளர்ப்போர் சங்கம் சார்பில் கோவை, பாரதிபார்க் ரோட்டிலுள்ள துணை வன பாதுகாவலர் அலுவலக வளாகத்தில்நடந்தது.

வனமரபியல் கோட்டவன பாதுகாவலர் சண்முகசுந்தரம் தலைமை வகித்து பேசுகையில், ""காகித கூழ் மரங்களுக்கு ஆண்டு தோறும் அரசு விலை நிர்ணயிக்கிறது. அரசுக்கு சொந்தமான நிலத்தில்விளையும் மரங்களை தொழிற்சாலைகள், தங்கள் சொந்த செலவில் அறுத்து எடுத்து செல்கின்றன.

ஆனால், தனியார் நிலத்தில் விளையும் மரங்களின் கொள்முதல் நேர்மாறாக உள்ளது. விவசாயிகளே வெட்டி எடுத்து, போக்குவரத்து செலவுகளை ஏற்று, தொழிற்சாலைகளுக்கு அனுப்ப வேண்டியுள்ளது,'' என்றார். கூட்டத்தில், விதை கிடங்கு சரகர் புஷ்பாகரன், வன விரிவாக்க அலுவலர் துரைசாமி, மாவட்ட மூலிகை மரம் வளர்ப்போர் சங்க தலைவர் தேவராஜ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### மஞ்சள் அறுவடைக்கு பின் செய்ய வேண்டியது என்ன? : விவசாயிகளுக்கு அறிவுரை

கோவை : புது மஞ்சள் அறுவடைக்குப்பின் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்து, தமிழ்நாடு விளைபொருள் விற்பனை வாரியம் விவசாயிகளுக்கு சில தகவல்களை தெரிவித்துள்ளது.விற்பனை வாரியத்தின் கோவை மையம் அறிக்கை: மஞ்சள் பயிரின் தண்டை 10 நாட்களுக்கு முன் தரையின் மேல் மட்டத்தில் 10 செ.மீ.,விட்டு அறுத்து விட வேண்டும்.

இவ்வாறு செய்தால், மஞ்சளின் ஈரப்பதம் குறைவதுடன் விரைவில் முதிர்ச்சி அடையும். "மஞ்சள் கொத்து' கருவியை பயன்படுத்தி, மஞ்சளை கொத்தி எடுக்க வேண்டும். ஈர மஞ்சளில் இருந்து ஐந்தில் ஒரு பகுதி பதப்படுத்திய மஞ்சள் கிடைக்கும். பச்சை மஞ்சளை சுத்தமான நீரில் வேக வைக்க வேண்டும். மஞ்சள் வெந்துவிட்டதை அதன் வாசனையில் இருந்து அறியலாம்.

வாசனை வந்ததும் வேகவைப்பதை நிறுத்தி, விரலால் மஞ்சளை அறுத்து வெந்துள்ளதை உறுதி செய்யவேண்டும்; அதிகமாக வேக வைக்க கூடாது; நிறம் மக்கி விடும். சரியாக வேக வைக்காவிட்டால், காய வைக்கும் போது உடைந்து சிறு சிறு துண்டுகளாகிவிடும். வேக வைத்த மஞ்சளை வெயிலில் 7 செ.மீ., உயரத்துக்கு பரப்பி 15 நாட்கள் வரை காய வைக்க வேண்டும். காய வைக்கப்பட்ட மஞ்சளில் சிறு, சிறு வேர்களும், செதில்களும் இருந்தால் அதை சுத்தப்படுத்த வேண்டும்.

மஞ்சளுக்கு மெருகேற்றுவதும், நிறமேற்றுவதும் மிகவும் முக்கியம். மெருகேற்றும் கருவி கொண்டோ அல்லது கூடைகளை பயன்படுத்தியோ மெருகேற்ற வேண்டும். நூறு கிலோ மஞ்சளை மெருகேற்ற 40 கிராம் படிகாரம் , 2 கிலோ மஞ்சள் தூள், 140 கிராம் ஆமணக்கு எண்ணெய், 30 கிராம் சோடியம் பை சல்பேட், 30 மி.லி., சோடியம் ஹைட்ரோ குளோரிக் அமிலம் சேர்த்து தயாரிக்கப்பட்ட கரைசலில் நிறம் ஏற்றலாம்.

இவ்வாறு, பதப்படுத்தப்பட்ட மஞ்சளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு கொண்டு சென்று, தினசரி விலை நிலவரம் அறிந்து, கூடுதல் விலைக்கு சரியான எடையில் விற்று பயன்பெறலாம். இவ்வாறு, அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### சூரியகாந்தி பயிரில் அதிக லாபம் பெறும் வழிகள் : வேளாண்துணை இயக்குனர் ஆலோசனை

சிறுபாக்கம்:மங்களூர் ஒன்றிய விவசாயிகள் சூரியகாந்தி பயிரில் அதிக லாபம் பெற வேளாண் துறை சார்பில் ஆலோசனை தெரிவிக்கப் பட்டுள்ளது.இது குறித்து கடலூர் வேளாண் துணை இயக்குனர் (வணிகம்) கனகவேல், விருத்தாசலம் கோட்ட அலுவலர் (வணிகம்) அமுதா விடுத்துள்ள செய்திக்குறிப்பு:மங்களூர் ஒன்றியம் மங்களூர், தொழுதூர், வேப்பூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் தற்போது சூரியகாந்தி பயிர் அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது.

எண்ணெய் வித்து பயிரான சூரியகாந்தியில் எண்ணெய் அளவு குறையாமல், தரம் கெடாமல் காக்கவும், நல்ல லாபத் தில் விற்கவும் சூரியகாந்தி பயிரின் இலைகள் பழுத்து மஞ்சள் நிறமாக மாறிய நிலையிலும், பூக்கொண் டைகள் பழுப்பு நிறமாகவும் மாறியிருந்தால் மட் டுமே அறுவடை செய்ய வேண்டும்.விதைகளை சோதித்து பார்த்தால் மேல்புறம் கருமையாகவும், உட்புறம் வெள்ளை நிறமாகவும், கடினமானதாகவும் இருக்கும்.

சூரியகாந்தியின் பூத்தலையினை மட்டும் அறுவடை செய்ய வேண்டும். பின்னர் ஒரே சீராக களத்தில் பரப்பி காயவைத்து, மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறை அதனை திருப்பி விட வேண்டும்.பூத்தலைகளை அறுவடை செய்தவுடன் வெயிலில் பரப்பி காய வைக்க வேண்டும். குவித்து சேமித்தால் விதைகளை பூஞ்சானம் தாக்கி மணிகளின் தரம் பாதிக்கப்படும்.

காய்ந்த பூக்களிலிருந்து விதைகளை பிரித்தெடுக்க கதிரடிக்கும் இயந்திரம் அல்லது தடிகள் கொண்டு அடித்து பிரிக்க வேண்டும்.பிரித்தெடுத்த நல்ல விதையுடன் கலந் துள்ள சுருங்கிய, முதிராத விதைகள், கெட்டுப் போன விதைகள், பூச்சி நோய் தாக்கிய விதைகளை தனியே பிரித்தெடுக்க வேண்டும்.இவ்வாறு தரம் பிரித்து ஒழுங்குமுறை விற்பனை கூடங்களுக்கு கொண்டு வந்து விற்பதன் மூலம் சூரியகாந்தி பயிரில் விவசாயிகள் அதிக லாபம் பெறலாம்.

## முந்திரியில் தேயிலை கொசுவை கட்டுப்படுத்த வழிமுறை வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சாத்தையா தகவல்

விருத்தாசலம்:முந்திரி மரங்களை தாக் ககூடிய தேயிலை கொசுவை கட்டுப்படுத்தினால் விவசாயிகள் அதிக மகசூல் பெறலாம் என வேளாண் அறிவியல் நிலைய தலைவர் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து விருத்தாசலம் வேளாண் அறிவியல் நிலைய தலைவர் சாத் தையா விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

முந்திரி மரங்களை தாக்கக்கூடிய பூச்சிகளில் தேயிலை கொசுவும் ஒன்றாகும். இத் தேயிலை கொசு முந்திரி மரத்தில் இளந்தளிர், பூங்கொத்து மற்றும் பிஞ்சு உருவாகும் பருவங்களில் தாக்கி சேதம் விளைவித்து அதிக அளவில் மகசூல் இழப்பை ஏற்படுத்தும். எனவே இப்பூச்சியின் தாக்கத்தை அறிந்து கட்டுப்படுத்துவது இன்றியமையாதது. எனவே முந்திரி பூக்கும் பருவத்தில் ஒரு லிட்டர் தண்ணீரில் 2 மி.லி., எண் டோசல்பான் 35 இ.சி., அல்லது குளோர்பைரிபாஸ் 20 இ.சி., மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2.5 மி.லி., என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும்.

மேலும் பூக்கள் கொட் டுவதை தடுக்க மருந்தோடு லிட்டருக்கு 2-3 கிராம் என்ற அளவில் யூரியாவை பயன்படுத்தலாம். இது தவிர புரோபினோபாஸ் மருந்தினை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 1.5 மி.லி., என்ற அளவில் கலந்து தெளிக்கவேண்டும்.முந்திரி பிஞ்சுவிடும் பருவத்தில் இப்பூச்சியை கட்டுப்படுத்த கார்பரில் 50 சத நனையும் தூள் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 கிராம் வீதம் கரைத்து தெளித்திட வேண்டும். இவ்வாறு செய்தால் முந்திரியில் தேயிலை கொசுவை கட்டுப்படுத்தி அதிக மகசூல் பெறலாம். இவ்வாறு செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## நிலத்தை பதப்படுத்த சணப்பை மகசூல் அதிகரிக்கும் நம்பிக்கை

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் சுற்று வட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் நிலத்தை பதப்படுத்த அடி உரமாக சணப்பையை பயிரிட்டு வருகின்றனர். இதன் மூலம் மகசூல் அதிகரிக்கும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் உள்ளனர். ஈரோடு மாவட்டத்தில் ஆண்டு முழுவதும் தண்ணீர் வசதி கொண்ட விவசாய பகுதிகளாக கோபி அரக்கன்கோட்டை, தடப்பள்ளி மற்றும் கீழ்பவானி பாசன பகுதிகள் உள்ளது. ஆயிரக்கணக்கான ஏக்கரில் நெல், கருப்பு, வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்பட்டு வருகிறது.

நாளடைவில் ஏற்பட்ட கால்நடைகள் வளர்ப்பு குறைவு போன்ற காரணங்களால் இயற்கையான கழிவுகளை நிலத்தில் உரமாக பயன்படுத்த முடியவில்லை. தற்போதுள்ள நவீன வாழ்க்கை முறையில் ஃபிளாஸ்டிக் நிறைந்த குப்பைகளையும் நிலத்தில் உரமாக பயன்படுத்த முடியவில்லை. விவசாயிகள் மகசூலை பெருக்கவும், பயிர்களை பூச்சிகளிடம் இருந்து காக்கவும் செயற்கையான உரங்களை அதிகளவில் பயன்படுத்தினர். நாளடைவில் ஏற்பட்ட உரத்தட்டுபாடு, உரத்துக்கான அதிக செலவு ஆகிய காரணங்களால் விவசாயிகள் இயற்கையான உர முறைகளை பின்பற்ற தொடங்கினர். ஒரு போகம் முடிந்த பிறகு மறுபோகத்திற்கான காலத்துக்குள் அடி உரமாக பயன்படுத்தப்படும் சணப்பையை பயிரிட விவசாயிகள் முடிவு செய்தனர்.

இரண்டு மாத பயிரான சணப்பை இரண்டு அடி உயரம் வளர்ந்தவுடன், அப்படியே நிலத்தில் அறுத்து போட்டு விடுவர். பின்னர் உழவு ஓட்டினால் சணப்பை இழைகள் நிலத்தில் மக்கி அடி உரமாக மாறி விடுகிறது. இதில் கரும்பு, நெல், வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர்களை பயரிடலாம். கோபி அரக்கன் கோட்டை மற்றும் தடப்பள்ளி பாசன பகுதிகளில்

முதல் போகத்திற்கு வரும் ஏப்ரல் மாதம் 15ம் தேதி தான் பவானிசாகர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். இதனால் தரிசாக உள்ள விவசாய நிலங்களில் அடி உரமாக சணப்பையை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர்.

### உர உற்பத்தி மையத்துக்கு 5 கிலோ மண்புழு இலவசமாக வழங்கல்

கோபிசெட்டிபாளையம்: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் டி.என்.பாளையம் வட்டாரத்தில் அமைக்கப்பட்டுள்ள 10 மண் புழு உர உற்பத்தி மையங்களுக்கு ஐந்து கிலோ மண்புழு இலவசமாக வழங்கப்பட்டது. விவசாயிகளுக்கு மண் புழு வகைகள், புழு வளர்ப்பு முறைகள், குடில் அமைப்பது. உர உற்பத்தி முறைகள் மற்றும் பயன்பாடுகள் குறித்து வேளாண் துறை மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது. கோவை வேளாண்மை பல்கலைக்கழகம் சார்பில் 10 விவசாயிகளுக்கு தலா ஐந்து கிலோ மண் புழுவை, வேளாண்மை அலுவலர்கள் வைத்தீஸ்வரன், சரோஜா ஆகியோர் வழங்கினர். "விதை கிராம திட்டத்தின் கீழ் மான்ய விலையில் பயிறு வகைகள், தானியங்கள் சேமித்து வைக்க சேமிப்பு கலங்கள் மஞ்சள் அண்டா வகை மற்றும் மூடியுடன் கூடிய ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் வகைகள் மான்ய விலையில் வழங்கப்படுகிறது. விருப்பமுள்ள விவசாயிகள் டி.என்.பாளையம், கள்ளிப்பட்டி, காசிப்பாளையம் மற்றும் நால்ரோடு விரிவாக்க மையங்களில் பெயர்களை பதிவு செய்து கொள்ளலாம்' என டி.என்.பாளையம் வேளாண்மை உதவி இயக்குநர் பாபு கூறினார்.

### 17,583 பருத்தி மூட்டை ரூ.2.22 கோடிக்கு ஆத்தூரில் ஏலம்

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் 17 ஆயிரத்து 583 பருத்தி மூட்டைகள் 2 கோடியே 22 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது. ஆத்தூர் புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ஞாயிற்று கிழமை பருத்தி ஏலம் நடந்து வருகிறது. நேற்று நடந்த ஏலத்துக்கு விவசாயிகள் ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி 15 ஆயிரத்து 544 மூட்டை, டி.சி.ஹெச்., 1,667 மூட்டை, கொட்டு பருத்தி 372 மூட்டை என 17 ஆயிரத்து 583 மூட்டைகள் விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.ஹெச்., ரக பருத்தி ஒரு குவிண்டால் அதிக பட்சமாக 5,136 ரூபாயும், குறைந்த பட்சமாக 4,599 ரூபாய்க்கு ஏலம் போனது. ஆர்.சி.ஹெச்., ரக பருத்தி குவிண்டால் அதிகபட்சமாக 3,606 ரூபாய், குறைந்த பட்சமாக 3,286 ரூபாய்க்கு ஏலம் போனது. கொட்டு பருத்தி ஒரு குவிண்டால் அதிகபட்சமாக 2,540 ரூபாயும், குறைந்த பட்சமாக 1,899 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்று ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கடந்தாண்டு நவம்பரில் துவங்கி தொடர்ந்து நடந்து வரும் பருத்தி ஏலத்துக்கு ஒரே நாளில் 17 ஆயிரத்து 583 பருத்தி மூட்டைகள் கொண்ட 6,154 குவிண்டால் பருத்தி இரண்டு கோடிய 22 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது சாதனையாக உள்ளது.

### சீஸன் துவங்குவதால் வியாபாரிகள் மகிழ்ச்சி: மஞ்சள் ஏற்றுமதி பிரகாசமாக இருக்க வாய்ப்பு

ஈரோடு: ஈரோடு மஞ்சள் மார்க்கெட்டில் "ஏப்ரல்' மாதத்தில் சீஸன் துவங்குவதால் ஏற்றுமதி விற்பனை "பிரகாசமாக' இருக்கும் என ஈரோடு வியாபாரிகள் கூறுகின்றனர்.மஞ்சள் உற்பத்தியில் இந்தியா முன்னணி நாடாக திகழ்கிறது. இந்தியாவில் 185.32 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 701.66 லட்சம் டன் மஞ்சள் உற்பத்தியாகிறது. தமிழகத்தில்

ஆண்டுதோறும் 33 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் 158.64 லட்சம் டன் மஞ்சள் உற்பத்தியாகிறது. தமிழகத்தில் மற்ற மாவட்டங்களை காட்டிலும் ஈரோடு மாவட்டம் மஞ்சள் உற்பத்தியில் முன்னணி மாவட்டமாக திகழ்கிறது.

ஈரோட்டில் ஒழுங்குமுறை விற்பனை மையம் கண்காணிப்பில், ஈரோடு சொசைட்டி, கோபி சொசைட்டி மற்றும் தனியார் கமிஷன் மண்டிகள் செயல்பட்டு வருகின்றன. இது தவிர, நூற்றுக்கணக்கான தனியார் ஏற்றுமதி, இறக்குமதி நிறுவனங்கள் செயல்படுகின்றன. மஞ்சள் மார்க்கெட்டுக்கு ஈரோடு மாவட்டத்தில் இருந்து 60 சதவீத மஞ்சளும், கர்நாடகா, திருவண்ணாமலை, சேலம், தர்மபுரி, வேலூர் போன்ற பகுதியில் இருந்து 40 சதவீத மஞ்சளும் வரத்தாகிறது. மாவட்டத்தில் மைசூரு சம்பா, எட்டாம் நம்பர், பத்தாம் நம்பர் உள்ளிட்ட ரகங்கள் அதிகளவில் பயிரிடப்படுவது வழக்கம். எட்டாம் நம்பர் மஞ்சள் டிசம்பர் மாதத்தில் அறுவடை துவங்கி, ஜனவரி மாதத்தில் மார்க்கெட்டுக்கு வரத்தாகும்.

கர்நாடகா, சேலம், ஆத்தூர், தர்மபுரி, கிருஷ்ணகிரி, ஓசூர், திருவண்ணாமலை, வேலூர் பகுதியில் இருந்து வழக்கமாக ஃபிப்ரவரி 15ம் தேதிக்கு மேல் புதிய மஞ்சள் வரத்தாகும். அதற்கு பின் புதிய மஞ்சள் சீஸன் வெகுவாக துவங்க ஆரம்பிக்கும். மைசூரு சம்பா, பத்தாம் நம்பர் ரகங்கள் ஃபிப்ரவரி, மார்ச் மாதத்தில்தான் வரத்தாகும்.

மஞ்சள் விலை இரண்டு ஆண்டுக்கு முன் அதிகபட்சமாக குவிண்டாலுக்கு 2,500 ரூபாய் வரை விலைபோனது. மஞ்சள் வியாபாரிகள் முதல் விவசாயிகள் வரை மஞ்சள் மூட்டைகளை தேக்கி வைத்தனர். ஆனால், 2009-10ல் மஞ்சள் எதிர்பாராத விதமாக குவிண்டாலுக்கு 13 ஆயிரம் ரூபாய் வரை விலைபோனது. இந்த விலையேற்றம் தமிழகம் முழுவதும் உள்ள விவசாயிகளை புருவம்தூக்க செய்தது.

மஞ்சள் விலையேற்றத்துக்கு முக்கியக்காரணம் "ஆன்-லைன்' வர்த்தகமே என வியாபாரிகள் தெரிவித்தனர். 2009 டிசம்பர் 31ல் கடைசி நாளான்று ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் மஞ்சள் குவிண்டாலுக்கு குறைந்த விலையாக 10 ஆயிரத்து 927 முதல் அதிகபட்சமாக 11 ஆயிரத்து 409 வரை விலைபோனது. 2010 புத்தாண்டு துவங்கிய முதல் வாரத்தில் ஆங்கிலப்புத்தாண்டு, தைப்பொங்கல் திருநாள் என அடுத்தடுத்து வந்த நாட்கள் விடுமுறை நாளாக அறிவிக்கப்பட்டது. ஜனவரி 4ம் தேதியன்று மஞ்சள் குவிண்டாலுக்கு 11 ஆயிரத்து 455 ரூபாய்க்கு விலைபோனது. அதற்கு அடுத்த வந்த ஃபிப்ரவரி மாதத்தில் மஞ்சள் விலை குவிண்டாலுக்கு 500 முதல் 1,000 ரூபாய் வரை ஏற்ற இறக்கமாகவே இருந்தது. மார்ச் மாத துவக்கத்தில் இருந்து நேற்று வரை மஞ்சள் குவிண்டாலுக்கு பத்தாயிரத்தை எட்டுவதும், குறைவதுமாகவே உள்ளது. ஈரோடு மஞ்சள் வியாபாரிகள் கூறியதாவது:

மஞ்சளை பொருத்த வரையில் எப்போது விலையேறும், இறங்கும் என கூறமுடியாது. சென்ற நான்கு நாளில் குவிண்டாலுக்கு 400 ரூபாய் வரை கூடியுள்ளது. தற்சமயம் வரத்து மிகவும் குறைவாக உள்ளது. இந்தியா மற்றும் வெளி நாடுகளில் இருப்பு மஞ்சள் வெகுவாக குறைந்துள்ளது. சென்றாண்டில் மஞ்சள் குவிண்டாலுக்கு 13 ஆயிரம் வரை விலைபோனது. தற்சமயம் குவிண்டாலுக்கு 4,000 ரூபாய் வரை விலை குறைந்துள்ளது. மார்ச் கடைசி வாரத்திலும், ஏப்ரல் துவக்கத்திலும் சீஸன் துவங்கவுள்ளது. இந்த சமயத்தில் மஞ்சள் ஏற்றுமதி பரபரப்பாக இருக்கும். மொத்தத்தில் மஞ்சளின் எதிர்காலம் "பிரகாசமாக' இருக்க வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

**விளாச்சேரியில் ஒருங்கிணைந்த வேளாண் தகவல் மையம் திறப்பு**

திருப்பரங்குன்றம் : விளாச்சேரியில் நீர்வள, நிலவள திட்டதின் கீழ் ளோண்மை துறை சார்பில், ஒருங்கிணைந்த தகவல் மையத்தை உலக வங்கி குழு தலைவர் ரபிகாரே திறந்து வைத்தார்.
உலக வங்கி உதவியுடன் நடக்கும் வேளாண் பணிகளை ரபிகாரே பார்வையிட்டார். அவர் பேசுகையில்,""தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்துவது, அதிக மகசூல் பெறுவது குறித்து விவசாயிகள் வேளாண் அதிகாரிகளை தேடி செல்வதை தவிர்க்க வேண்டும். விவசாயிகளை அதிகாரிகள் தேடிச் சென்று ஆலோசனை வழங்க வேண்டும்' என்றார்.
விழாவிற்கு ஊராட்சி தலைவர் மரகதவல்லி தலைமை வகித்தார். பொதுப்பணி துறை தலைமை பொறியாளர் ராமமூர்த்தி, கண்காணிப்பு பொறியாளர் முகைதீன், செயற் பொறியாளர்கள் விஜயகுமார், செல்வராஜ், உதவி செயற்பொறியாளர் கள் மோகன்குமார், கோவிந் தராஜன். வேளாண்மை துறை இணை இயக்குனர் சங்கரலிங்கம், துணை இயக் குனர் சம்பத்குமார், உதவி இயக்குனர்கள் செல்வம், வடிவேல்குமார், மனோகரன், வேளாண் அலுவலர்கள் உலகம்மாள், திருப்பதி, மீனாட்சி சுந்தரம், மனோரஞ்சிதம், தோட்டக்கலை துணை இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி, உதவி இயக்குனர் மோகன்குமார், மற்றும் விவசாயிகள், மகளிர் சுய உதவிக்குழுவினர் கலந்து கொண்டனர்.

## மஞ்சள் ஏலம் துவக்கம்

ஆத்தூர்: ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள் ஏலம் துவங்கிய முதல் நாளில் 65 குவிண்டால் மஞ்சள், 6 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.ஆத்தூர் அதன் சுற்றுவட்டார பகுதிகளான கெங்கவல்லி, தம்மம்பட்டி, வாழப்பாடி உள்ளிட்ட பகுதியில் 10 ஆயிரம் ஏக்கரில் மஞ்சள் பயிரிடப்பட்டது. அறுவடை செய்யப்பட்ட மஞ்சளை சுத்தம் செய்து ஈரோடு, நாமக்கல் மாவட்டம் நாமகிரிபேட்டை, ஆத்தூர் பகுதியில் உள்ள தனியார் மஞ்சள் மண்டிக்கும், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் நடக்கும் ஏலத்துக்கும் விவசாயிகள் கொண்டு சென்று விற்பனை செய்து வந்தனர்.

இந்தாண்டுக்கான மஞ்சள் ஏலம் நேற்று முன்தினம் ஆத்தூர் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் துவக்கப்பட்டது. உருண்டை, விரலி மற்றும் பனங்காலி என 100 மூட்டை மஞ்சளை விவசாயிகள் கொண்டு வந்தனர்.உருண்டை மஞ்சள் ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 199 ரூபாய், விரலி மஞ்சள் ஒரு குவிண்டால் 10 ஆயிரத்து 789 ரூபாய், பனங்காலி மஞ்சள் ஒரு குவிண்டால் 8,989 ரூபாய் என 65 குவிண்டால் மஞ்சள் 6 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

## குரும்பூரில் நெல் கொள்முதல் நிலையம் திறப்பு விழா

நாசரேத் : குரும்பூரில் நெல் கொள்முதல் நிலையத்தை எம்.எல்.ஏ., அனிதா ராதாகிருஷ்ணன் திறந்து வைத்து முதல் விற்பனையை துவக்கி வைத்தார்.
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகத்தின் சார்பில் தமிழக அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையம் திறப்பு விழா குரும்பூரில் நடந்தது. விழாவிற்கு திருச்செந்தூர் தொகுதி எம்.எல் .ஏ.,அனிதா ராதாகிருஷ்ணன் தலைமை வகித்து நெல் கொள்முதல் நிலையத்தை திறந்து முதல் விற்பனையை துவக்கி வைத்து பேசினார்.
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் பிரகாஷ்பாபு வரவேற்றார். கடம்பாகுளம் பாசன விவசாய சங்கத் தலைவர் குணா, அங்கமங்கலம் பஞ்.,தலைவர் ஜாண், மாவட்ட கவுன்சிலர் வித்யாசங்கர், அழகப்பபுரம் பஞ்.,தலைவர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். விழாவில் குரும்பூர் நகர திமுக.,செயலாளர்

விஜயபெருமாள், விவசாய சங்க தலைவர்கள் எட்வர்ட் ஆறுமுகம் கல்யாணசுந்தரம், நாசரேத் டவுன் பஞ்.,தலைவர் மாமல்லன், கானம் டவுன் பஞ்.,தலைவர் செந்தமிழ் சேகர், குருகாட்டூர் பஞ்.,தலைவர் பூலான், சதீஷ், ரமேஷ், முத்துப்பாண்டியன், திருச்செந்தூர் நகர திமுக.,செயலாளர் கோபால் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### மானிய விலையில் உரம்

மணப்பாறை:மணப்பாறை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில், தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு மானிய விலையில் இடு பொருட்கள் வழங்கப்பட உள்ளது.இது குறித்து வேளாண் உதவி இயக்குனர் (பொ) ராஜேஸ்வரன் விடுத்துள்ள அறிக்கை: மணப்பாறை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்காக 50 சதவீதம் மானியத்தில் நிலக்கடலைக்கு தேவையான ஜிப்சம் மற்றும் நுண் சத்து தெளிப்பதற்கு தேவையான டி.ஏ.பி. அமோனியம் சல்பேட் மற்றும் பேராக்ஸ் தேவையான அளவு இருப்பு உள்ளது. தேவைப்படும் விவசாயிகள் உடனே அணுகலாம். மேலும் ரூ. 7 ஆயிரத்து 500 மானியத்தில் பயறு வகை பயிர்கள் மற்றும் எண்ணெய் வித்து பயிர்களுக்கு தெளிப்பு நீர் பாசனம் ஏற்பாடு செய்து தரப்படும். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி

மணப்பாறை : மணப்பாறை தோட்டக்கலைத் துறை மற்றும் மலைப் பயிர்கள் துறை சார்பில் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி மஞ்சம்பட்டியில் நடந்தது.
தோட்டக்கலைத் துறை உதவி இயக்குனர் சந்திரசேகரன் தலைமை வகித்து தேசிய தோட்டக்கலை இயக்கத்தின் கீழ் வழங்கப்படும் அரசு மானிய திட்டங்கள் பற்றி பேசுகையில், அரசு மானியங்களை பெற முதலில் விவசாயிகள் அனைவரும் தங்களது சிட்டி அடங்கலுடன் வந்து தோட்டக்கலைத்துறை அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். டிவி போன்ற ஊடகங்களில் வெறும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளை மட்டும் பார்க்காமல், விவசாயம் தொடர்பாக வரும் நல்ல பல செய்திகளையும் பார்த்து தெரிந்து கொள்ள வேண்டும்.

தோட்டக்கலை பயிர் சாகுபடி, அரசு மானியம் உள்ளிட்ட எந்த விசயமாக இருந்தாலும் விவசாயிகள் தோட்டக்கலைத்துறை அதிகாரிகளை சந்தித்தால் அவர்களுக்கு உதவ அதிகாரிகள் தயாராக இருக்கிறோம். எனவே, அரசு மானிய திட்டங்களை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு வாழ்க்கையில் முன்னேற வேண்டும். கண்வலி கிழங்கு பயிருக்கு அரசு சார்பில் 50 சதவீத மானியமும், கோலியாஸ் பயிருக்கு 20 சதவீத மானியமும், சந்தன மரம் வளர்க்க 75 சதவீத மானியமும் வழங்கப்படுவதாக தெரிவித்தார்.

நிகழ்ச்சியில், மூலிகை பயிர்கள் சாகுபடி குறித்து வையம்பட்டி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் கணேசன், ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு திட்டம், துல்லிய பண்ணை திட்டம் குறித்து மருங்காபுரி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ஆறுமுகம், தெளிப்பு நீர் பாசனம் குறித்து மணப்பாறை துணை வேளாண் அலுவலர் தங்கராஜ், மருங்காபுரி தோட்டக்கலைத்துறை அலுவலர் கோவிந்தராஜ், சொட்டுநீர் பாசனம் குறித்து ஆல்பா இரிடெக் நிறுவனத்தின் ராஜரத்தினம், கோகோ பயிர் சாகுபடி குறித்து கேட்பரீஸ் நிறுவன தொழில்நுட்ப இயக்குனர் பாஸ்கரன் ஆகியோர் பேசினர்.தொடர்ந்து விவசாயிகளின் சந்தேகங்களுக்கும் அதிகாரிகள் பதிலளித்தனர். மணப்பாறை தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் சந்திரசேகரன் நன்றி கூறினார்.

### மக்காச்சோளம் சாகுபடி பயிற்சி முகாம்

குடியாத்தம் : குடியாத்தம் அடுத்த மேலாலத்துர் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக் கழகம் கரும்பு ஆராய்ச்சி நிலையம் சார்பில் அணைக்கட்டு பகுதியை சேர்ந்த விவசாயிகளுக்கான மக்காச்சோளம் சாகுபடி குறித்த ஒரு நாள் சிறப்பு பயிற்சி முகாம் விரிஞ்சிபுரத்தில் நடந்தது.

நிகழ்ச்சிக்கு, ஏரிநீர் பாசன சங்கத் தலைவர் ரவி தலைமை வகித்தார். கரும்பு ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் சுரேஷ் மக்காச்சோள பயிர்களின் நன்மைகள், நடவு முறைகள் மற்றும் சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து பேசினார். உதவி பேராசிரியர் சத்யா மக்காச்சோள பயிர்களுக்கு உரமிடுதல், சந்தைப்படுத்துதல், சொட்டு நீர்பாசனம் அமைத்தல் மற்றும் அதன் பயன்கள் குறித்து விளக்கினார்.உதவி பேராசிரியர் சுதாகர் இப்போதைய சூழ்நிலைக்கு ஏற்ற மக்காச்சோள பயிர் ரகங்கள் மற்றும் விதை உற்பத்தி குறித்தும், உதவி பேராசிரியை ஷீபா ஜாஸ்மீன் மக்காச்சோளத்தில் பூச்சி கட்டுப்பாடு முறைகள் குறித்தும் விளக்கமளித்தனர். முகாமில் இறைவன்காடு, விரிஞ்சிபுரம் மற்றும் செதுவாலை பகுதியை சேர்ந்த 50க்கும் அதிகமான விவசாயிகள் கலந்துகொண்டனர். நீர்வள, நிலவளத்திட்ட முதுநிலை ஆராய்ச்சியாளர் ரேவதி நன்றி கூறினார்.

### பூங்கொத்து பயிற்சி

விழுப்புரம் : அனைவருக்கும் கல்வி இயக்கம் விழுப்புரம் வட் டார வள மையத்தில் புத் தக பூங்கொத்து குறித்த செயற்கை கோள் ஒளிப ரப்பு நிகழ்ச்சி நடந்தது.
அனைவருக்கும் கல்வி இயக்க இணை இயக்குனர் கண்ணப்பன் கருத்துரை வழங்கினார். புத்தக பூங் கொத்து புத்தகத்தில் உள்ள ஆங்கில வார்த்தைகள், வாக்கியங்கள், எழுத்துக் கள், படங்கள் குறித்து செயற்கை கோள் மூலம் விளக்கினர். 22 ஒன்றியங் களில் இருந்தும் ஆசிரியர் பயிற்றுனர்கள் கலந்து கொண்டனர். வட்டார வள மைய மேற்பார்வை யாளர் விஸ்வநாதன் நிகழ்ச்சி ஏற் பாடுகளை செய்திருந்தார்.

### அறுவடை பின்செய் நேர்த்தி பயிற்சி

அருப்புக்கோட்டை : கோவிலாங்குளம் மண் டல ஆராய்ச்சி நிலையத்தில், தமிழ்நாடு நீர்வள, நில வள திட்டத்தின் கீழ், வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிக துறை மூலம் தெற்காறு உபவடிநில பகுதி விவசாயிகளுக்கான அறுவடை பின்செய் நேர்த்தி பயிற்சி நடந்தது.
துணை இயக்குனர் கணேசன் தலைமை வகித்தார். வேளாண் அலுவலர் சந்திரமோகன் வரவேற்றார். பேராசிரியர் ஜெயக்குமார், தொழில் நுட்பங் களை கடைபிடித்து விளை பொருட்களை தரம் பிரித்து விற்பனை செய்வதன் மூலம் கூடுதல் லாபம் பெறலாம், என்றார். பேராசிரியை முத்துலட்சுமி, தோட்டடக்கலை துறை பயிர்கள் சந்தைபடுத்துதல் பற்றியும், அறுவடை பின் நேர்த்தி பற்றி பேராசிரியை காயத்திரிதேவி விளக்கினர். வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தும் திட்டங்கள் குறித்து அலுவலர் பாலசுப்பிரமணியன் பேசினார். உதவி வேளாண்மை அலுவலர்கள் பெரியகருப்பன், பாண்டி செல்வி, பால்துரை ஏற்பாடு செய்தனர்.

### அமராவதி அணை நீர்மட்டம் சரிவு: நெற்பயிர் சாகுபடிக்கு திடீர் சிக்கல்

மார்ச் 08,2010,00:00



உடுமலை: அமராவதி அணையின் நீர்மட்டம் குறைந்து வருவதால்,  நெற்பயிர்களுக்கு போதிய தண்ணீர் கிடைக்காமல் கருகும் அபாய சூழ்நிலை நிலவுகிறது. உடுமலை அருகே  கல்லாபுரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில், விவசாயம் பிரதானத் தொழிலாக உள்ளது. கல்லாபுரம் ராஜவாய்க்கால் பாசனத்தின் மூலம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகின்றன.

கல்லாபுரம் பகுதிக்கு  அமராவதி அணையிலிருந்து 10 மாதங்களுக்கு பாசனத்திற்கு தண்ணீர் வழங்கப்படுகிறது. போதிய அளவு தண்ணீர் கிடைப்பதால், விவசாயிகள் மற்ற பயிர்கள் சாகுபடியை விட  நெற் பயிர் சாகுபடி செய்ய அதிகளவு ஆர்வம் காட்டுகின்றனர். பழைய ஆயக்கட்டு பாசனத்தில் குறுவை, சம்பா என ஆண்டிற்கு இரண்டு பருவங்களில் நெல் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு பருவத்திற்கும் ஏற்ற வகையில்  நெல் ரகங்கள் இப்பகுதிகளில் சாகுபடி செய்யப்படுகிறது. போதிய அளவு தண்ணீர் கிடைத்ததால், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் இரண்டாம் போக நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது. தற்போது, அமராவதி அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதால்,  நெல் பயிர்களுக்கு போதிய நீர்  கிடைக்காமல்  பாதிக்கும் அபாயம் நிலவுகிறது.  இதனால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

விவசாயிகள் கூறியதாவது: கல்லாபுரம் மற்றும் சுற்றுப்பகுதிகளில்,  பல ஆண்டுகளாக ஆயிரம் ஏக்கருக்கு மேல் நெற் பயிர்சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது.  ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது.  ஒப்பந்த அடிப்படையில் கூலி வழங்கப்படுகிறது. நெல் நடவு செய்த மாதத்திலிருந்து மூன்று மாதங்களுக்கு பிறகு  அறுவடை நடைபெறும். ஆண்டுதோறும்  அறுவடை செய்யப்படும் நெல் வியாபாரிகள்  மூலமாக  தாராபுரம், கரூர், கேரளா உள்ளிட்ட பகுதிகளுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

இந்நிலையில், கடந்த நவ., மாதம் போதிய அளவு தண்ணீர் இருந்ததால், நெற் பயிர் சாகுபடி செய்யப்பட்டது.  ஆனால், அமராவதி அணையின் நீர்மட்டம் வெகுவாக குறைந்து வருவதால், போதிய தண்ணீர் கிடைக் குமா என்பது கேள்விக்குறியாகியுள்ளது. தற்போது, 130 நாட்கள் பயிரான நெல் பால் பிடிக்கும் தருணத்தில் உள் ளது.  நெற் பயிர்களுக்கு  20 நாட்களுக்கு மேல் தண்ணீர் வேண்டும். ஆனால், தற்போதுள்ள அமராவதி அணையின் நீர்மட்டம் குறைந்ததால், போதிய தண்ணீர் கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.  நெற்பயிர்களுக்கு போதிய தண்ணீர்

கிடைக்காவிட் டால், கருகும் அபாயம் உள்ளது. ஏக்கருக்கு 10 ஆயிரம் ரூபாய் வரை செலவு செய்து சாகுபடி செய்த நெற் பயிர்கள் அறுவடை தருணத்தில் போதிய தண்ணீர் கிடைக்காவிட்டால், மகசூல் பாதித்து நஷ்டம் ஏற்படும் இவ்வாறு, விவசாயிகள் தெரிவித்தனர்.

**_சர்க்கரை விலை உயர்வால் ஆலைகளுக்கு பயன் சர்க்கரை துறை நிறுவனப் பங்குகள் குறுகிய கால முதலீட்டிற்கு ஏற்றவை_**

*கிரண் காப்தா சோம்வான்ஷி – சிகா சர்மா*

*இக்கனாமிக் டைம்ஸ் ஆய்வு பிரிவு*

*சென்ற இரண்டு ஆண்டுகளில் சர்க்கரை விலை வரலாறு காணாத அளவிற்கு அதிகரித்து காணப்படுகிறது. இதனால் சர்க்கரை நிறுவனங்களின் வருவாய் மற்றும் நிகர லாபம் சிறப்பான அளவில் அதிகரித்துள்ளது. இந்நிலையில் இத்துறை நிறுவனப் பங்குகளில் குறுகிய கால அடிப்படையில் முதலீடு செய்யலாம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். சில குறிப்பிட்ட நிறுவனங்களின் பங்குகளை தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளலாம் என்றும் பரிந்துரை செய்துள்ளனர்.*

*பிரேசில் – இந்தியா*

*உலக அளவில் சர்க்கரை உற்பத்தியில் பிரேசில் நாடு முதலிடத்திலும், இந்தியா இரண்டாவது இடத்திலும் உள்ளன. உலகின் சர்க்கரை உற்பத்தியில் பிரேசில் நாட்டின் பங்களிப்பு 20 சதவீதமாக உள்ளது. சர்க்கரை பயன்பாட்டில் இந்தியாவே முன்னிலையில் உள்ளது. சென்ற 2008–09–ஆம் ஆண்டு பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) சர்வதேச அளவில் 16.11 கோடி டன் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. இது, அதற்கு முந்தைய பருவத்தை விட 5.6 சதவீதம் குறைவாகும். உற்பத்தியில் ஏற்பட்ட சரிவு, உல அளவல் சர்க்கரை விலை உயர்வுக்கு காரணமாக அமைந்தது.*

*சர்க்கரை உற்பத்தி*

*நம் நாட்டில், நடப்பு 2009–10–ஆம் ஆண்டு பருவத்தில் சுமார் 1.44 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என கேர் நிறுவனம் மதிப்பீடு செய்துள்ளது. அதே சமயம் சர்க்கரைக்கான தேவைப்பாடு 2.34 கோடி டன்னாக உள்ளது. எனவே உள்நாட்டில் 90 லட்சம் டன் சர்க்கரைக்கு பற்றாக்குறை உள்ளது. உற்பத்தி–அளிப்புக்கு இடையே உள்ள இடைவெளியை குறைக்க வேண்டுமானால் இறக்குமதியைத்தான் சார்ந்து இருக்க வேண்டும். எனினும் இறக்குமதியால் சர்க்கரை விலை குறையும் என்று கூறுவதற்கில்லை.*

*தற்போது ஒரு குவிண்டால் சர்க்கரை விலை ரூ.4,110–ஆக உள்ளது. மூலச் சர்க்கரை மற்றும் சர்க்கரை இறக்குமதி அதிகரித்து வருவதால், அடுத்த சில மாதங்களில் ஒரு குவிண்டால் சர்க்கரை விலை ரூ.3,500–4,000 என்ற அளவில் இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதாவது, ஒரு கிலோ ரூ.35–40 என்ற அளவில் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.*

*மகாராஷ்டிரா*

*நம் நாட்டில் மகாராஷ்டிரா, உத்தரபிரதேசம், கர்நாடகா, தமிழ்நாடு, குஜராத் மற்றும் ஆந்திர பிரதேசம் ஆகிய மாநிலங்கள் கரும்பு உற்பத்தியில் முன்னிலை வகிக்கின்றன. நாட்டின் மொத்த கரும்பு உற்பத்தியில் இந்த ஆறு மாநிலங்களின் பங்களிப்பு 90 சதவீதமாக உள்ளது. எனவே பெரும்பாலான சர்க்கரை ஆலைகளும் இந்த*

*மாநிலங்களில்தான் மையம் கொண்டுள்ளன.*

*இந்திய சர்க்கரை துறையில் ஸ்ரீரேணுகா சுகர்ஸ், பஜாஜ் இந்துஸ்தான், பல்ராம்பூர் சினி, ஈ.ஐ.டீ. பாரி, சக்தி சுகர்ஸ், பன்னாரி அம்மன் சுகர்ஸ், திரிவேணி இன்ஜினியரிங், சிம்பாலி சுகர்ஸ், துவாரகீஷ் சுகர் மற்றும் தாம்பூர் சுகர் மில்ஸ் ஆகிய நிறுவனங்கள் குறிப்பிடத்தக்கவையாகும்.*

*கடந்த 2007–08–ஆம் ஆண்டு பருவத்தில் நாட்டின் சர்க்கரை உற்பத்தி 7 சதவீதம் குறைந்து, 2.63 கோடி டன்னாக சரிவடைந்தது. அதற்கு முந்தைய பருவத்தில் உற்பத்தி 2.83 கோடி டன்னாக இருந்தது. கடந்த இரண்டு பருவங்களாக சர்க்கரை உற்பத்தியில் கடும் சரிவு ஏற்பட்டு வருவதால் இதன் விலை அதிகரித்து, நிறுவனங்களின் லாபம் உயரத் தொடங்கியது. குறிப்பாக சென்ற இரண்டு காலாண்டுகளில் இந்த நிறுவனங்களின் வருவாய் அசுர வளர்ச்சி கண்டுள்ளது.*

*சென்ற டிசம்பர் மாதத்துடன் நிறைவடைந்த காலாண்டில், முன்னணி 15 சர்க்கரை நிறுவனங்களின் மொத்த வருவாய் 87 சதவீதம் உயர்ந்து, ரூ.5,297 கோடியாக அதிகரித்துள்ளது. அதேசமயம், நிகர லாபம் பன்மடங்கு அதிகரித்து ரூ.12 கோடியிலிருந்து ரூ.692 கோடியாக மிகவும் உயர்ந்தது.*

இறக்குமதி ஒப்பந்தங்கள்

*இந்நிலையில் முன்னணி நிறுவனங்கள் 18.60 லட்சம் டன் மூலச் சர்க்கரையை இறக்குமதி செய்யும் வகையில் ஏற்கனவே ஒப்பந்தங்கள் மேற்கொண்டுள்ளன. சென்ற ஆண்டில் நிறுவனங்கள் 13 லட்சம் டன் மூலச்சர்க்கரையை இறக்குமதி செய்துள்ளன. இது, நடப்பு பருவத்தில் சுத்திகரிக்கப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படும்.*

*சர்க்கரை நிறுவனங்களின் வர்த்தகம் செழிக்கத் தொடங்கியுள்ள நிலையில், பல ஒருங்கிணைந்த நிறுவனங்களின் பங்கின் விலை அவற்றின் ஒரு பங்குச் சம்பாத்தியத்தை விட பல மடங்குகள் அதிகரித்துள்ளது. இது, எதிர்காலத்தில் இப்பங்குகள் அளிக்கும் ஆதாயம் குறைந்த அளவிற்கே இருக்கும் என்பதை உணர்த்துகிறது.*

மூன்றாவது பெரிய நிறுவனம்

*ஸ்ரீரேணுகா சுகர்ஸ், உலகின் மூன்றாவது பெரிய சர்க்கரை உற்பத்தி நிறுவனமாகும். இந்நிறுவனத்தின் மொத்த வருவாயில் 50 சதவீதம் பிரேசில் நாடு வாயிலாக கிடைக்கிறது. கடந்த இரண்டு ஆண்டுகளில் தொடர் கையகப்படுத்துதல் நடவடிக்கைகள் வாயிலாக சர்வதேச செயல்பாடுகளை விரிவுபடுத்தியுள்ளது.*

*இந்நிறுவன பங்கின் தற்போதைய விலை அதன் ஒரு பங்குச் சம்பாத்தியத்துடன் ஒப்பிடும்போது 15 மடங்குகள் என்ற அளவில் உள்ளது. இது, இரண்டு மாதங்களுக்கு முன்னர் 48 மடங்குகளாக இருந்தது. இந்த பங்குகளை புதிதாக சந்தையிலிருந்து வாங்குவதைக் காட்டிலும், ஏற்கனவே வைத்துள்ள முதலீட்டாளர்கள் தொடர்ந்து தக்க வைத்துக் கொள்ளலாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அடுத்த 1–2 ஆண்டு காலத்தில் இப்பங்கின் விலை சரிவடையும் பட்சத்தில் அதிக அளவில் வாங்கிக் கொள்ளலாம் எனவும் நிபுணர்கள் பரிந்துரை செய்துள்ளனர்.*

*திரிவேணி இன்ஜினியரிங் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனப் பங்கின் விலை குறைந்த கால அடிப்படையில் ஏற்ற, இறக்கத்துடன் இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பல்ராம்பூர் சினி நிறுவனப் பங்குகளையும் முதலீட்டாளர்கள் தக்க வைத்துக் கொள்ளலாம் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சென்ற இரண்டு மாதங்களுக்குப் பின்னர் சர்க்கரை விலை சற்று குறைந்துள்ளதையடுத்து, இந்த இரண்டு நிறுவனங்களின் பங்கின் விலையும் சற்றே சரிந்துள்ளது.*

## மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் வெள்ளைப்பூண்டு வரத்து அதிகரிப்பு– விலை சரிவு பீன்ஸ் வரத்து குறைந்தது

மேட்டுப்பாளையம்,மார்ச்.8–

மேட்டுப்பாளையம் மார்க்கெட்டில் வெள்ளைப்பூண்டு வரத்து அதிகரித்ததை தொடர்ந்து விலை ‘கிடுகிடு’வென சரிந்தது. பீன்ஸ் வரத்து குறைந்தது.

வெள்ளைப்பூண்டு

*மேட்டுப்பாளையம் வெள்ளைப்பூண்டு மண்டிகளுக்கு நேற்று (ஞாயிற்றுக்கிழமை) சுமார் 3 ஆயிரம் மூட்டை வந்திருந்தது. நீலகிரி மாவட்டத்தில் வெள்ளைப்பூண்டு சீசன் தொடங்கி உள்ளதால் வரத்து அதிகரித்து காணப்பட்டது. இதன் காரணமாக விலை ‘கிடுகிடு’வென சரிந்து காணப்பட்டது. கடந்த வாரம் ஒரு கிலோ ரூ.85–ல்*

*இருந்து ரூ.165 வரை விற்பனை ஆனது.*

*இந்த நிலையில் வரத்து அதிகரித்ததால் தற்போது ஒரு கிலோ ரூ.50–ல் இருந்து ரூ.85 வரை விற்பனை ஆனது. இந்த விலை சரிவு நீலகிரி மாவட்ட வெள்ளைப்பூண்டு விவசாயிகளுக்கு பெரும் கவலையைத் தந்துள்ளது.*

*பீன்ஸ்*

*காய்கறி மண்டிகளுக்கு நேற்று முட்டைகோஸ் 15–ல் இருந்து 20 லோடும், கேரட் 1000 மூட்டையும், பீட்ரூட் 300 மூட்டையும், முள்ளங்கி 50 துண்டும், பீன்ஸ் 150 மூட்டையும், பச்சைப்பட்டாணி 40 துண்டும், நூல்கோல் 50 துண்டும், டர்னிப்ஸ் 60–ல் இருந்து 90 துண்டும் வந்திருந்தது.*

*முட்டைகோஸ் ஒரு கிலோ ரூ.2–ல் இருந்து ரூ.3, கேரட் ஒரு கிலோ ரூ.18–ல் இருந்து ரூ.21, பீட்ரூட் ஒரு கிலோ ரூ.4–ல் இருந்து ரூ.7, முள்ளங்கி ஒரு கிலோ ரூ.3–ல் இருந்து ரூ.6, பீன்ஸ் ஒரு கிலோ ரூ.30–ல் இருந்து ரூ.35, பச்சைப்பட்டாணி ஒரு கிலோ ரூ.26–ல் இருந்து ரூ.33.50. நூல்கோல் ஒரு கிலோ ரூ.6–ல் இருந்து ரூ.9, டர்னிப்ஸ் ஒரு கிலோ ரூ.4–ல் இருந்து ரூ.8 வரையும் விற்பனை ஆனது. பீன்ஸ் வரத்து குறைந்து காணப்பட்டதால் விலை 'மளமள'வென உயர்ந்து ஒரு கிலோ ரூ.30–ல் இருந்து ரூ.35 வரை விற்பனை ஆனது.*

*உருளைக்கிழங்கு*

*உருளைக்கிழங்கு மண்டிகளுக்கு கோலாரில் இருந்து 40 லோடும் கொல்கத்தாவில் இருந்து 15 லோடும் உருளைக்கிழங்கு வந்திருந்தது. கோலார் கிழங்கு 45 கிலோ ரூ.330–ல் இருந்து ரூ.380–க்கும், கொல்கத்தா கிழங்கு 45 கிலோ ரூ.280–ல் இருந்து ரூ.300–க்கும் விற்பனை ஆனது.*

## குன்னூர் ஏல மையத்தில் தேயிலை தூள் விலை வீழ்ச்சி

*குன்னூர், மார்ச்.8–*

*குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூள் விலை வீழ்ச்சி அடைந்தது. மேலும் 45 சதவீத தேயிலை தூள் தேக்கம் அடைந்தது.*

*விற்பனை எண் 9–க்கான ஏலம்*

*வாரந்தோறும் வியாழன், வெள்ளி 2 நாட்கள் குன்னூர் தேயிலை ஏல மையத்தில் தேயிலை தூள் ஏலம் நடைபெறுகிறது. இந்த ஏலத்தில் உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு வர்த்தகர்கள் கலந்து கொண்டு தேயிலை தூளை ஏலம் எடுக்கிறார்கள்.*

*விற்பனை எண் 9–க்கான ஏலம் கடந்த 4, 5 ஆகிய தேதி களில் நடைபெற்றது. ஏலத் திற்கு மொத்தம் 14 லட்சத்து 13 ஆயிரம் கிலோ தேயிலை தூள் வந்தது.*

*இதில் 9 லட்சத்து 26 ஆயிரம் கிலோ இலை ரகமாகவும், 4 லட்சத்து 87 ஆயிரம் கிலோ டஸ்ட் ரக மாகவும் இருந்தது.*

*ஏல மையத்தில் தேயிலை தூள் விற்பனை மந்தமாகவே இருந்தது. உள்நாட்டு தேவைக்காக தேயிலை தூளை வாங்கும் உள்நாட்டு வர்த்தகர் களின் பங்களிப்பு மிகவும் குறைவாகவே இருந்தது.*

*தேயிலை தொழிற்சாலைகள்*

*ஏற்றுமதியாளர்களை பொறுத்த வரை பாகிஸ்தான் நாட்டு வர்த்தகர்கள் மட்டுமே ஓரளவு தேயிலை தூளை வாங்கினர். ஏல மையத்தில் தேயிலை தூளுக்கு கிராக்கி இல்லாத காரணத்தால் அனைத்து தேயிலை தூள் ரகங்களுக்கும் 3 ரூபாய் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.*

*தேயிலை தூளை வாங்க வர்த்தகர்களின் மத்தியில் போட்டி இல்லாத காரணத் தால் 45 சதவீத தேயிலை தூள் தேக்கமடைந்து இருந்தது. சி.டி.சி. தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலையாக 144 ரூபாய் இருந்தது. 60 தேயிலை தொழிற்சாலைகளின் தேயிலை தூள் 100 ரூபாய்க்கு மேல் ஏலம் சென்றது.*

*ஆர்தோடக்ஸ் தேயிலை தூள்*

*ஆர்தோடக்ஸ் தேயிலை தூளின் உயர்ந்தபட்ச விலை 177 ரூபாயாக இருந்தது. 25 தேயிலை தொழிற்சாலை களின் தேயிலை தூள் 100 ரூபாய்க்கு ஏலம் சென்றது.*

*சராசரி விலையை பொறுத்த வரை இலை ரகத்தின் சாதாரண வகை 50 ரூபாய் முதல் 55 ரூபாய் வரையிலும்,*

*விலை உயர்ந்த தேயிலை தூள் 85 ரூபாயில் இருந்து 118 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*டஸ்ட் ரகம்*

*டஸ்ட் ரகத்தின் சாதாரண வகை 53 ரூபாயில் இருந்து 56 ரூபாய் வரையிலும், விலை உயர்ந்த தேயிலை தூள் 100 ரூபாயில் இருந்து 120 ரூபாய் வரையிலும் ஏலம் சென்றது.*

*விற்பனை எண் 10–க்கான ஏலம் வருகிற 11, 12 ஆகிய தேதிகளில் நடக்கிறது. ஏலத்திற்கு மொத்தம் 15 லட்சத்து 71 ஆயிரம் கிலோ தேயிலை தூள் ஏலத்திற்கு வருகிறது.*

---